Registered As Catholic Weekly

யாழ்ப்பாணம்.
இடைக்கப்பெற்றது
02 JUN 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

- 4 JUN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர்: 123 இதழ்: 6, 30—5—1997 விலை 5

## அரசாங்கம் இராணுவப் போக்கைக் கைவிட்டு அரசியல் தீர்விற்கு முன்வர வேண்டும்

— நெதர்லாந்து குழுவினரிற்கு யாழ் ஆயர்

நெதர்லாந்து தூதரகப் பொறுப்பாளர், தூதரகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்த போது அவர் மேலும் தெரிவித்த கருத்துக்கள் இவை:

— சர்வதேச மத்தியஸ்தம் தேவை.

— வெளிநாட்டுத் தூதரகங்கள் அரசியல் தீர்விற்கு நெருக்குதல் கொடுக்கவேண்டும். (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### யாழ் நகரில் மூவருக்கு குருப்பட்டம்

## யாழ் திருச்சபைக்கு புதிய குருமணிகள் அறுவர்!!!

யாழ். மறைமாவட்டம் இவ்வாண்டு (1) வின்ஸ்ரன் ஜேம்ஸ், (2) றெனால்ட் அ. யோர்ஜ், (3) செ. ஜோ சனிஸ்ரன், (4) ஏபிரகாம் யூட் நிக்சன், (5) கயித்தாம் பிள்ளை யூட் அமலதாஸ் (6) அ. அகஸ்ரின் ஆகிய ஆறு தியாக்கோன்மாரையும் புதிய குருக்களாகப் பெறும் பாக்கியம் பெற்றிருக்கிறது. இவர்களில் முதல் மூவரும் யாழ்நகர்ப் பகுதியில் பணியாற்றுகின்றபடியால் யூன் மாதம் 21ஆம் திகதி காலை 9-00 (புதிய நேரம்) யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் குருக்களாக திரு நிலைப் படுத்தப்படுவர்.



அருட்சகோதரர்

சே. வின்ஸ்ரன் ஜேம்ஸ் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கைச் சார்ந்த திரு. திருமதி அ. சேவியர், பிரான்சிஸ்கா தம்பதிகளின் புதல்வராவார். இவர் புனித யேப்ஸ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றார்.



அருட்சகோதரர்

செ. ஜோ சனிஸ்ரன் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயப் பங்கைச் சார்ந்த திரு திருமதி பீற்றர் அன்ரனி செல்வநாயகம் றெஜினா ஸ்ரெலா தம்பதிகளின் புதல்வராவார். இவர் யா/யசிந்தா றோ. க. த. க பாடசாலையிலும் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்று புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றார்.



அருட்சகோதரர்

றெனோல்ட் அ. யோர்ஜ் தெல்லிப்பழை புனித யுவானியார் ஆலய பங்கைச் சார்ந்த திரு. திருமதி அ. யோண் யோர்ஜ், றாபி திரேசா தம்பதிகளின் புதல்வராவார், இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் தன் ஆரம்பக் கல்வியை முடித்து புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்றார்.

### சமயம், ஆன்மீக எழுச்சி, நல்லொழுக்க விடயங்கள்

### ஆகியவை தொடர்பு சாதன நிகழ்ச்சிகளில்

## குறைந்து கொண்டு போகின்றன

— திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர்

31 ஆவது உலகத் தொடர்பு நாளுக்காக மே 11, 97 திருத்தந்தை விடுத்துள்ள "வழியும் உண்மையும் வாழ்வுமான இயேசுவை வெளிப்படுத்தல்" (யோவான் 14 : 6) என்ற செய்தியிலேயே மேற்படி தன் கவலையைத் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் நுட்ப முறைகளில் நடைபெறும் விடயங்களும், தொடர்புகளும் பெருமளவு மக்களின் இதயங்களைத் தொடுகின்றன. அவற்றின் தாக்கத்திலிருந்து "பாதுகாப்பது" கடினமானது.

வழியும் உண்மையும் வாழ்வுமான இயேசுவை வெளிப்படுத்துவதுதான் உலகத் தொடர்பு நாளில் நமது கருத்தாக இருக்க வேண்டும். யூபிலி ஆண்டுப் பணிகளுக்கும் மற்றைய கிறிஸ்தவப் பணிகளுக்கும் தொடர்புச்சாதனங்கள் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற கருத்களைத் தெளிவாக்கும் திருத்தந்தையின் செய்தியின் முக்கிய பகுதிகளைத் தொகுத்துத் தருகின்றோம். (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### அ. ம தி. புதிய நிர்வாகம்

யாழ். மாகாண அமலமரித் தியாகிகளின் மாகாணத் தலைவர் அருள்திரு. இயேசுநேசன் தனது ஆலோசகர்களை அருள்திரு. ஜீவா போல், அருள்திரு. வின்சன் பற்றிக், அருள் திரு. ஸ்ரனி அன்ரனி ஆகியோருடன் மே, 15இல் மடுத்திருப்பதியில் தம் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்கள்.

### பிரான்சீஸ்கன் சபையின் புதிய மாகாணத் தலைவர்

இலங்கை புனித பிரான்சிஸ்கன் சகோதர சபையின் மாகாணத் தலைவராக (Provincial Superior) அருட்சகோதரர் S. தொபியாஸ் C. M. S. F. நியமிக்கப்பட்டுள்ளார்.

31-05-97 இல் மாத்தளை தலைமை இல்லத்தில் நடைபெறும் திருச்சடங்கில் பொறுப்பேற்கஇருக்கும் இவர் யாழ் மரியன்னை பேராலயத்தை சார்ந்த செபஸ்தியாம் பிள்ளை றோசலின் தம்பதிகளின் புதல்வராவார். யாழ் சென் சாள்ஸ் வித்தியாலயம், மாத்தளைஇந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வி (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு வயது 20

"ஈழத்து உடன் பிறப்புக்களின் கண்ணீர் வரலாறு முற்றுப் பெற கடவுளை மன்றாடுகிறோம்." —அருள்திரு ம. ஜெகத் கஸ்பார்

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி தொடங்கி (1976 - 1996) 20ஆண்டுகள் நிறைவாகி விட்டன. அதனையொட்டி வெளியிட்ட 1997ஆம் ஆண்டு விசேட நாட்காட்டியிலே வரும் புத்தாண்டு, எல்லா நன்மைகளையும் உங்களுக்குத் தர வாழ்த்துகிறோம். குறிப்பாக ஈழத்து உடன் பிறப்புக்களின் கண்ணீர் வரலாறு முற்றுப்பெற கடவுளை மன்றாடுகிறோம்'' என்று தமிழ்ப் பணியின் இயக்குனர் அருள்திரு. ம. ஜெகத் கஸ்பார் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். ''தமிழ் ஈழப்பகுதிகளில் நடைபெற்று வரும் யுத்தத்திலே இறந்துள்ளவர்களில் ஆயிரக்கணக்கான பேர் வெரித்தாஸ் தமிழ் பணியின் நேயர்களாக இருந்தவர்கள்! அந்த இனிய நெஞ்சங்களுக்கு தமிழ்ப் பணியின் கண்ணீர் அஞ்சலிகள். (தொடர்ச்சி 5 ஆம் பக்கம்)

### அடிப்படையில் நாம் எல்லோரும் நல்ல மனிதர்களே!

அருள் திரு R. சூசைநாதன்.

கோப்பாய் தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பருடைய வருடாந்த திருநாள் திருப்பலியின் போது யாழ். மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் அருள்திரு. R. சூசைநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் மறையுரை ஆற்றும்போது புனித சூசையப்பர் நீதிமானாக விளங்கினார். நீதிமான் என்றால் எல்லா நற்பண்புகளும் நிறைந்தவர் என்று (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### வின்சென்டி போல் சபை ஸ்தாபகருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம்

வின்சென்டி போல் (S. V. P.) சபை ஸ்தாபகர் பிறெட்றிக் ஒசான்ணம் என்பவர் ஆகஸ்ற் 1997இல் பரிசில் முத்திப் பேறு பெற்ற பட்டம் பெறுவார். ஆகஸ்றில் உலக இளைஞர் தினத்தை ஒட்டி 21 - 24 ஆம் திகதிகளில் திருத்தந்தை பரிசிற்குப் போகும் போதே மேற்படி பட்டத்தை வழங்குவார்.

### ஆசிய ஆயர்களுக்கான விசேட பேரவை

## ஆசியாவில் மீட்பர் இயேசுக்கிறிஸ்துவும், அவரின் அன்புச்சேவைப் பணியும்

"வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்.'' (யோவான் 10 : 10)

திருத்தந்தை இரண்டாயிரம் ஆண்டு நிறைவு பற்றி எழுதிய திரு மடலிலே (நவம்பர், 10, 1994) ஆசிய ஆயர்களுக்கான விசேட பேரவை ஒன்றைக் கட்டுவது பற்றி தம் விருப்பத்தை வெளியிட்டிருந்தார்.

ஆயத்தக்குழு ஆசிய ஆயர்களுக்கானபேரவைக்கு "ஆசியாவில் மீட்பர் இயேசுக்கிறிஸ்துவும் அவரின் அன்புச்சேவைப் பணியும்'' என்ற தலைப்பை தெரிவு செய்துள்ளது. (தொடர்ச்சி2ஆம் பக்கம்)

"வந்ததே வணக்கமாதம் மரியாயின் மாதமே சந்தோசமாய் வந்தெல்லோரும் தாயாரைப் புகழ்வோமே.'' (சுவாமி ஞானப்பிரகாசரின் வணக்கமாத பாடலிலிருந்து)

## சமயம் ஆன்மீக எழுச்சி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் வாழ்க்கையில் சமயம் முக்கிய பங்கெடுக்கிறது என்பதை உதாசீனம் செய்வதையோ, அல்லது சமய நம்பிக்கை குறைந்துபோய் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதில்லை என்ற காரணத்தினால் தொடர்பு சாதனங்கள் அக்கொள்கைகளினால் ஆட்கொள்ளப்படுவதையோ, இவ்வாறு நிகழாது என்று நாம் நம்பியிருப்பது புத்திசாலித்தனமல்ல. சில தொடர்பு சாதனங்கள் - முக்கியமாகக் களிப்பூட்டும் பகுதி - வழமையாக மிக மோசமாக விளக்கமில்லாத முறையில் சமய நம்பிக்கை உள்ளவர்களுக்கு வெளிப்படுத்துகின்றன. மரபுத் தொடர்பு சாதனத்தில் இன்னும் கிறிஸ்துவுக்கு இடம் இருக்கின்றதா? புதிய தொடர்பு சாதனத்தில் அவருக்கு ஓர் இடம் பெற்றுக் கொடுப்போமா?

## ஆசியாவில்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயத்தக்குழுவினரும் ஆசிய இறையியலாளர்களும் இந்த பேரவைக்கான ஆயத்த நகலை தயார் செய்துள்ளனர். இந்த நகலின் முக்கிய நோக்கம் பொதுவான சிந்தனையையும் செபத்தையும் தூண்டி ஆலோசனையையும் கருத்துக்களையும் பெறுவதாகும்.

இதற்காக இந்த ஆயத்த நகலின் இறுதிப் பகுதியிலே ஒரு வினாக்கொத்தும் தரப்பட்டுள்ளது.

மறை மாவட்டங்கள், அவற்றின் தேவைகள், பிரச்சனைகள், சவால்கள் என்பவற்றை வெளிப்படுத்த ஏதுவான மேற்படி வினாக்கொத்தை ஆயர்கள் நிறைவு செய்து ஆவணி 1997க்கு முன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

## அரசாங்கம் ...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

— அமைதியான சூழ்நிலை என்று விவரிக்க முடியாத சூழ்நிலையிலேயே யாழ் மக்கள் வாழ்கின்றனர்.
- வன்னியில் இருந்து மக்கள் திரும்புவதற்கு அரசியல் காரணங்கள் ஒன்றுமில்லை. உணவு, நீர், மருந்து, பொருட்கள் என தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. அவற்றை தாங்க முடியாமல் தம் சொந்த இடம் திரும்புகின்றனர்.
— மீன்பிடி, மின்சாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு எனப் பல பிரச்சினைகள் இன்னும் உள்ளன.

ஆயரின் மேற்படி பேட்டியை வைத்து யாழ்நகர் உதயன் பத்திரிகையும், கொழும்பு தினகரன் பத்திரிகையும் ஆசிரியத் தலையங்கங்கள் தீட்டியுள்ளன. எல்லோரின் நன்மை கருதியும் அவற்றை மறுபிரசுரம் செய்கிறோம்.

### யாழ் ஆயரின் கோரிக்கை

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று பல்வேறு நிலைகளில் இருந்தும் குரல்கள் கேட்பது குறித்து கடந்த இரண்டு தினங்களாக இப்பத்திரிகையில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அத்தகைய குரல் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஒலித்துள்ளது.

அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டியதன் அவசியத்தை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகமும் வலியுறுத்தி உள்ளார்.

அரசாங்கம் தனது இராணுவப் போக்கைக் கைவிட்டு இனப்பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முன்வரவேண்டும்- இந்தப் பேச்சுவார்த்தையில் குறிப்பாக விடுதலைப் புலிகள் பங்கேற்கவேண்டும். பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முன்வருமாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்—என்று ஆயர் தம்மைச் சந்தித்த நெதர்லாந்துப் பிரதிநிதியிடமும் ஏனையோரிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதில் தனக்கு அக்கறை இருப்பதாக அரசு சொல்கிறது. அதற்கான சில முயற்சிகளிலும் அது ஈடுபட்டு வருகிறது. அதேவேளை தனது இராணுவப் போக்கையும் அது கைவிட்டதாக இல்லை. போரினூடு சமாதானம் என்ற அணுகுமுறையை இறுகப் பற்றிக்கொண்டு செயற்படுவதாகத் தெரிகிறது.

ஆகையால் அரசாங்கம் தனது இராணுவப் போக்கைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு உண்மையாகவே சமாதான வழியில், பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண செயல்ரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது.

அதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் யாழ்ப்பாண ஆயரின் கருத்து அமைந்திருக்கிறது. போருக்கு முடிவு கட்ட, சமாதானத்தை உருவாக்க, பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் பேச்சு நடத்துவது அவசியம்.

ஆனால் அந்தப்பக்கம் நோக்கி நகர்வதில் அரசு ஓரளவு தயக்கமும், தாமதமும் காட்டி வருவது துலக்கமாகத் தெரிகிறது. ஆகையால் இது விடயத்தில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் — தூதுவர்கள் — அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற ஆயரின் கோரிக்கை அர்த்தமுள்ளதாகும்.

சர்வதேச நாடுகளின் உதவியிலும் ஆதரவிலும் இலங்கை அரசு பெருமளவில் தங்கியுள்ளது. ஆகையால் அவற்றின் கூட்டான அழுத்தமே அரசை சரியான வழிக்கு விரைந்து மாற்றுவதற்கு பயனுள்ள மார்க்கமாக அமையும். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ். ஆயரின் கோரிக்கைக்கு செயல் வடிவம் கொடுப்பார்களா ?

நன்றி, உதயன் 30-04-97

### பிரயாண சிரமங்கள் தீரவேண்டும்

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் இம்மாத முற்பகுதியில் இடம் பெற்ற இணக்கப்பாட்டை யாழ்ப்பாண மக்கள் வரவேற்கின்றார்கள் என்றும், தமிழ்க் குழுக்கள் உட்பட எல்லாத் தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டை ஆதரிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாண ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தகாலமாக அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க இயலாத நிலையில் வாழ்கின்ற மக்களின் உணர்வுகளையே ஆயர் பிரதிபலிக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய மக்களின் பொருளாதார வாழ்வு பழைய நிலைக்குத் திரும்பிக்கொண்டிருப்பது பற்றியும், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பது பற்றியும், வேறு வசதிகள் தொடர்பான முன்னேற்றங்கள் பற்றியும் வெளிவருகின்ற செய்திகளுக்கு மத்தியில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களும் உள்ளன என்பதை ஆயர் சுட்டிக் காட்டியிருக்கின்றார். முக்கியமாகப் பிரயாணம் மக்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது என்பதை அவர் கூறியவற்றிலிருந்து அறிய முடிகின்றது.

இன்றைய மனிதனின் வாழ்க்கை குறுகியவட்டத்துக்குள் சுருங்கியதாக இல்லை. பரந்து விரிந்த பரிணாமங்களைக் கொண்டது. எனவே, மனித வாழ்க்கைக்குப் பிரயாணம் மிகவும் முக்கியமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூர்ப் பிரயாண வசதிகள் மட்டுப் படுத்தப்பட்டனவாகவே உள்ளன. அத்தோடு, சோதனைச் சாவடிகள் அடுத்தடுத்து உள்ளமையும் உள்ளூர்ப் பிரயாணத்தில் ஏற்படும் சிரமங்களுக்கு ஒரு பிரதான காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சோதனைச் சாவடிகள் அமைப்பதைத் தவறென யாரும் சொல்ல முடியாது. பாதுகாப்பு நடவடிக்கைகளில் கூடுதலான கவனம் செலுத்துவதன் மூலமே சிவில் நிர்வாகத்தை நிலைப்படுத்த முடியும் என்பதையிட்டும் அபிப்பிராய பேதம் இல்லை.

ஆனால், பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பாதிக்காத வகையில் சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியுமானால் அது மக்களின் பிரயாணக் கஷ்டங்களைக் கணிசமான அளவுக்குத் தீர்ப்பதாக அமையும் என்பதை அதிகாரிகள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். உள்ளூர் நிலைமையில் காணப்படுகின்ற முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு சில நடைமுறைகளில் தளர்வை ஏற்படுத்தலாம்.

உள்ளூர்ப் பிரயாணத்தில் மாத்திரமன்றிக் கொழும்புக்கான பிரயாணத்தைப் பொறுத்த வரையிலும் கூட மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் பிரயாணம் செய்வதற்காக மக்கள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இத்தாமதத்தினால் எத்தனையோ அத்தியாவசிய அலுவல்கள் பாதிக்கப்படுகின்றன.

வடக்கிலும், கிழக்கிலும் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சியின் பெறுபேறுகளைப் பிரயாணத்தில் மக்கள் அனுபவிக்கும் சிரமங்களும் பாதிக்கக் கூடியவை என்பதால், இச்சிரமங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நன்றி தினகரன் 5-5-97

## அடிப்படையில் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள். நாங்கள் கூட எல்லா நற்பண்புகளும் நிறைந்த நல்ல மனிதர்களே. ஆனால் வாழ்க்கையின் சூழ்நிலைகள் எங்களைக் குழப்பி விடுவதுண்டு. எல்லாக் குழப்பத்தின் மத்தியிலும் புனித சூசையப்பரைப் போல நீதிமான்களாக நாம் வாழவேண்டும்.

பங்குத்தந்தை S. E. N. குணசீலன் அடிகளாருடன் இணைந்து அருள் திரு. சூசைநாதன் அவர்களுடைய தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளையும் கலந்து கொண்டார்.

S. G. ரூபவசந்தினி
(மறைஆசிரியர்) கோப்பாய்.

## பிரான்சீஸ்கன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி(

பெற்று திண்டிவனத்திலும் (இந்தியா) றோமையிலும் உயர் கல்வி பெற்ற இவர் நவ சந்நியாச மாணவ பயிற்சி இயக்குனராகவும், மட்டுநகர் அசிசி இல்லத்திலும் பணியாற்றியுள்ளார்.

பணி சிறக்க பாதுகாவலனின் இறையாசி மிக்க வாழ்த்துக்கள்.

## பத்திரிகையாளருக்கு விருது

இந்தியாவின் சென்னை நகர முன்னணி கிறிஸ்தவ இதழான நியூலீடர் New Leader பத்திரிகை மேகலாய ஆளுநரின் தலைமையில் சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருதுகளை அண்மையில் சென்னையில் வழங்கியது.

M, A. ஜோ அன்ரனி S. J. அடிகளை ஆசிரியராகக் கொண்டு சென்னையில் வெளிவரும் நியூலீடர் New Leader என்ற தேசிய கிறிஸ்தவ சஞ்சிகையே 1996 ஆம் ஆண்டிற்கான விருதுகளை சிறந்த பத்திரிகையாளருக்கு வழங்கிக் கௌரவித்தது.

1. சிறந்த இந்திய பத்திரிகையாளருக்கான விருது,
2. சிறந்த இந்திய கிறிஸ்தவ பத்திரிகையாளருக்கான பேராயர் கஸ்மீர் விருது,
3. வாழ் நாள் முழுவதும் சிறந்த விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்புச் செய்த பத்திரிகையாளருக்கான விருது ஆகிய விருதுகளே வழங்கப்பட்டன.

நியூ லீடர் பத்திரிகையின் ஆசிரியர் M. A. ஜோ அன்ரனி அடிகள் UCIP எனப்படும் அகில உலக கத்தோலிக்க ஒன்றியத்தின் தென் ஆசியப் பகுதித் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் பாடசாலைகளின் கிறிக்கட்சங்கத்தலைவர் யார் தெரியுமா ?

யாழ்.பாடசாலைகளின் 97—98 ஆம் ஆண்டு கிரிக்கட் சங்கத் தலைவராக புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் எ. ஐ. பேணாட் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வருடாந்த பொதுக்கூட்டம் மார்ச், 14, 97 இல் திரு. த. சண்முகநாத பிள்ளை தலைமையில் கூடிய போதே மேற்படி தெரிவு நடைபெற்றது.

15, 17 வயதிட்குட்பட்டசுற்றுப் போட்டியை பாடசாலை நாட்களில் அடுத்த தவணையில் ஆரம்பிப்பதென்றும் அதன்பின் கிறிக்கெட் விழாவை நடத்துவதென்றும் மேலும் முடிவு செய்யப்பட்டது.

---

The First Native Priest of Jaffna - a book written by Em. Bishop B. Deogupillai is available at the Catechetical centre for Rs 10 only.

---

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# யாழ் திருச்சபை வரலாறு

## 5. நவீன யாழ் திருச்சபை

அருள்திரு. இ. ஜெயசீலன்

### 16 ஆம் 17ஆம் நூற்றாண்டுகள்

### சந்தியோகு

போர்த்துக்கேயர் கிறிஸ்தவ சமயத்திற்கு மக்களை, துப்பாக்கியும் வாளும் கொண்டு, பயமுறுத்தி, அடக்கி ஒடுக்கி பலாத்கார முறைகளில் மதமாற்றம் செய்தனர் என்ற கூற்றில் எவ்வளவு உண்மை உள்ளது என்பது ஆராயத்தக்கது.

போர்வழி வந்து எம்மண்ணை ஆக்கிரமித்த போர்த்துக்கேயரின் போர் முறைகளையும், மத மாற்ற முறைகளையும் உற்று உணர்ந்து வேறுபடுத்தி இனங்கண்டுகொள்ளுதல் அவசியம். தமிழ் அரசனுடன் போர்பொருதி, அவன் படையினரைக் கொன்று குவித்த போர்த்துக்கல் இராணுவம் சிலுவைக்கொடி ஏந்தி, தம் போர்த்தாரக மந்திரமாக 'சந்தியோகு' என்று முழங்கியது. போரில் மடிந்த சிப்பாய்களுக்கு, கிறிஸ்தவ பணிக்குருக்கள் சிலுவை ஏந்தி, செபங்களைச் சொல்லி, அவஸ்தைப்பூசுதல் அனுமானம் கொடுத்தனர்.

அதேவேளை, போர்த்துக்கேய இராணுவம் தமிழ் அரசனின் அரண்மனையையும், அதன் காப்பரணான கோட்டையையும், அதனருகே இருந்த, அரசன் வழிபடும் ஆலயங்களையும் தகர்த்தது, தமிழ்ப் பாரம்பரியங்களும் (ஏடுகளும்), போர்த்துக்கேய ஆவணங்களும் குறிக்கும் இச்சம்பவங்களை, போர்க்கால நடவடிக்கைகளாகவே கணித்து மதிப்பிடப்படல்வேண்டும்.

தென்னிந்தியாவில் 6ம் 7ம் 8ம் நூற்றாண்டுகளில் பல்லவ எழுச்சியின்போதும். 9ம் 10ம் 11ம் நூற்றாண்டுகளில் சோழ எழுச்சியின்போதும் மாற்றுச் சமயங்களின் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டு, அவற்றின் மேலே தமது வழிபாட்டுத்தலங்களைக் கட்டியெழுப்பினர் என்பது அகழ்வாராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். 8ம் 9ம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இஸ்லாமியப் படை எழுச்சியில், புகழ்மிக்க இந்துகோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டு, அவற்றின் செல்வங்கள் சூறையாடப்பட்டு அவ்விடங்களில் தாஜ்மகால், செங்கோட்டை நிறுவப்பட்டன என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

இந்நூற்றாண்டில் எம்மண்ணில் அமைதிகாக்க வந்த, இந்துக்கள் நிறைந்த, இந்திய அமைதிகாக்கும் படை, அழித்த ஆலயங்களும், அதன் வளங்களும் எப்பெறுமானம் கொண்டவை என்பதையும் எண்ணிப்பார்ப்பது ஏற்புடையது, போர் என்ற வெறிக்கு ஆண்டவனும் ஆலயங்களும் விதிவிலக்காகினவா?

### சந்திரகாந்தனின் கண்டனம்

யாழ்ப்பாணத்தின் முதல் வேதசாட்சி, லிஸ்போனின் பல்கியோர் அடிகளாரைப்பற்றி A.J.V. சந்திரகாந்தன் அவர்கள் தம்நூலில் அடிக்குறிப்பில் கண்டன விமர்சனம் செய்துள்ளார். யாழ்ப்பாணத்து அரசனின் முன்னிலையில் அடிகளார் விசாரிக்கப்பட்டபோது, ''சிரஞ்சீவியரசன் இறைவனுக்கு கொடுக்கப்படவேண்டிய மகிமையை, விக்கிரகங்கட்கு கொடுக்கலாகாது என்ற காரணத்தாலேயே, விக்கிரகங்களை உடைப்பித்தேன்'' என்று பகர்ந்தார்.

அடிகளும் அவருடன் கோப்பாய்க் கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்த ஐவரும் சாட்டையால் அடிக்கப்பட்டு, நான்கு நாட்கள் பட்டினி போடப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டனர். இவர்கள் கோப்பாய்க் கிராமத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலுமே வேதம் போதித்தனர். இவர்கள் போதனையால் மட்டும் மக்கள் மதம் மாறவில்லை.

இவர்களின் ஏழ்மை, காருண்யம், அன்பு, பக்தி, விசுவாசவாழ்வு, வைராக்கியம் கண்டும் சிலர் மனம் திரும்பி மதம் மாறினர், மனம் மாறி, மதம் மாறியோர் தங்கள் ஊர்க்கோவில்களில், தாங்கள் முன்பு வழிபட்ட சிலைகளை என்ன செய்வதென, அடிகளாரிடம் வினவினர். அவர் அவற்றை அழித்து விடும்படி அறிவித்தார். அவர்களும் அப்படியே செய்தனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

### பிசாசு வழிபாடு

லிஸ்போனின் பெல்கியோர் அடிகள் கூறியவற்றைத் திருப்பி நோக்குவது நன்று. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தம்நூலில் ''இவை பிசாசானவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருப்பதனால், முழு உலகின் அரசனான இறைவனுக்கு மாத்திரமே உரிமையானவற்றை, அவனுக்கு அர்ப்பணிப்பது இறைமகனுக்கு செய்யும் துரோகம் ஆகும், பிசாசுக்கு இவைகளின் எவ்வித உரிமையும் இல்லை. ஆதலால் இறை ஊழியனாகிய நான் அவைகளை அழித்தேன்'' என்று கூறியதாக எழுதியுள்ளார்.

உலகமதங்களின் தத்துவ நோக்கில், தீமையின் வடிவமான சாத்தானை அல்லது பிசாசை மூன்று முக்கிய இறையியல் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

ஒன்று - இந்து பௌத்த தாந்தரிக மரபுகளில் தீயசக்தி- இறைசக்தி இரண்டுக்கும் வித்தியாசமில்லாத ஏகஇறையியல் கொள்கையைக் கொண்டும், வாழ்வு - சாவு; ஆக்கம் - அழிவு; நன்மை - தீமை; என்பவை ஓர் இறைவனின் வெளிப்பாடே என்னும் கொள்கையைக் கொண்டும் உள்ளன.

இரண்டு - தீமைக்கும் நன்மைக்கும் வரையறுக்கப்பட்ட வித்தியாசங்கள் உண்டு என்பதும், தீமை அனுமதிக்கப்பட்டால், நன்மையின் நலன் நன்குபுரியும் என்பதும், (நன்மையும் தீமையும் வெவ்வேறு தனித்தியங்கும் சத்திகள்.)

மூன்று- இறைவனுக்கும் சாத்தானுக்கும் முற்றும் முழுதான முரண்பாடுகள் உண்டு என்றும், சாத்தான் இறைவனால் இறுதியில் தோற்கடிக்கப்படுவான் என்பதும் உண்மை.

பேய், பூதம் என்ற பதங்கள், பக்தி இலக்கியங்களில் கடவுளுக்கும் பாவிக்கப்பட்டிருக்கின்றன. சிவனை, பூதவராயன் என்றும், கொற்றவையைப் பேய்ச்சி, பிசாசுகளுடன் சுடலையில் நடமாடுபவளாகவும் சங்க இலக்கியங்கள் சித்திரிக்கின்றன.

சைவம் எழுச்சிபெற்று, புத்துயிரடைந்த காலகட்டத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் இதை எழுதினார். அதனால் அவர் பெரும் எதிர்ப்பையும் சந்தித்தார்.

ஆறுமுகநாவலர் அவர்கள் பேய், பிசாசு வழிபாட்டுக்கும் இறை வழிபாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை தன் பிரசுரங்களில், விபரமாக விளக்கியுள்ளார். பேய், பிசாசுகளை வழிபடல் சைவர் வழி அல்ல, என்று எடுத்துரைத்தார். அவர், வழிபாட்டை ஆகம சைவம் என்றும், ஆகம முறைப்படி அனுஷ்டிக்கப்படா சைவம் என்றும் பிரிந்தார்.

இதற்கு உதாரணமாக'' இந்தியாவிலே பெரும்பான்மையோருக்கு காடன், மாடன், கறுப்பன், வீரன், பெரிய தம்பிரான் முதலிய பிசாசுகளே குலதெய்வங்கள் என்று இந்தியாவின் சுய நிலையை சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற கண்ணகி வழிபாட்டைக் குறைகூறி, அதைக் கைவிடவேண்டுமென்று வலியுறுத்தினார். ''செட்டிச்சியும், பிறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்பொருள்...தாழ்ந்த சாதியாளும் அந்நியசமயத்தவளுமாயுள்ளவள்''... என்றார்.

எனவேதான் பெல்கியோர் அடிகளின் கூற்றும், செயலும் கிறிஸ்தவக் கொள்கைப்படி தவறாகக் கொள்ளமுடியாது. 'பேய்' என்பது இறைவனுக்கு எதிராவி என்று அடிகளின் நோக்கும் போக்கும் இருந்த போது, அரசனின் நோக்கும் போக்கும் மறுதலையாகவே இருந்தன. இதனால் சைவத்தின் காவலன், 'ராஜதுரோக' நிந்தனையை ஐவரில் சுமத்தி சிரச்சேதம் செய்தான்.

இந்த வரலாற்று உண்மையை நன்கு புரிந்து கொண்டால் வீண் குரோதங்கள் நீங்கும், சர்வ சமய ஒப்புரவு உண்டாகும் என்பது திண்ணம்.

---



# சிறுவர் விருந்து

அன்புத் தம்பி தங்கைகளே !

''உன்னைப் போல் உன் அயலவனை நேசி''

''உங்களைத் துன்புறுத்து வோருக்காகச் செபியுங்கள்''

''உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்.''

''உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு''

''ஒன்றும் எதிர்பாராமல் கடன் கொடுங்கள். அப்போது உங்களுக்கு மிகுதியான கைம்மாறு கிடைக்கும்''

இவையாவும் வேதாகம வாக்கியங்களாகும். இவற்றை வாசித்ததனால் பிறர் பணிக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் தூண்டியதாகக் காந்தி கூறினார். அவரை மகாத்மா ஆக்கியதும் இவ் வாக்கியங்களே.

யேசுவின் போதனைகள் யாவும் உயர்ந்தவையே. பிறருக்குத் தொண்டு செய்பவனே கடவுளை ''அப்பா'' என்று அழைக்கத் தகுதி பெற்றவன் என்கிறார் யேசு. கடவுளை அன்பு செய்ய வேண்டுமென்றால் முதலில் மனிதரை அன்பு செய் என்றார்.

அன்புடன் சிசிலி அக்கா

### பொன் மொழி

★ மிக எளிதாக கூறக் கூடியவைகள் வார்த்தைகளும் உறுதி மொழிகளும். ஆனால் அவற்றை நிறை வேற்றக் கூடியவர்கள் தான் நம்பக் கூடியவர்கள்.

- செல்வன் டொமினிக் பிறேமானந் ஆ. யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

### தெரிந்து கொள்வோம்.

1. ஓரறிவுடையவை :- தொட்டுணரும் புல்பூண்டு வகைகள்.
2. ஈரறிவுடையவை :- சுவையறிவுடைய பாம்பு போன்ற ஊர்வன.
3. மூவறிவுடையவை:- எறும்பு, கறையான் வகைகள்.
4. நான்கறிவுடையவை :- ஒளி அறிவு பெற்ற தும்பி வண்டு போன்றவை.
5. ஐந்தறிவு படைத்தவை :- மிருகங்கள், பறவைகள்
6. ஆறறிவு படைத்தவன் :- மனிதன்.


ஆறாவது அறிவு பகுத்தறிவாகும். வேறு எந்த உயிரினங்கங்களுக்கும் 'பகுத்தறிவு' இல்லை. இது மனிதனுக்கு மட்டுமே உரியது. அதனால் மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபடுகின்றான்.

### குறும்புதிர் 3இன் விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. | ஊதாரி | 1. | ஊமை |
| 3. | மையம் | 2. | தாயகம் |
| 4. | மாது | 4. | மாரி |
| 6. | கத்தரின் | 5. | துன்பம் |
| 8. | தீ | 7. | தருமம் |
| 10. | சாமம் | | |

### பரிசு பெற்றோர்

1. இ. மேரி றபேக்கா
   நாரந்தனை கணேச மகாவித்தியாலயம் ஊர்காவற்றுறை.
2. றூபநிதி செபஸ்தியாம்பிள்ளை
   இல. 828, யாழ். ஆஸ்பத்திரி வீதி.
3. யசோதினி மகேந்திரன்
   யாழ் / கன்னியர் மடம் மகாவித்தியாலயம்
4. ம. நிக்சன்
   யாழ் / மத்திய கல்லூரி
5. விமலினி நவறட்ணம்
   யா / புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
6. கு. ஆன் தர்சிகா
   விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.
7. டெ. கனியூட் அரவிந்தறாஜ்
   யாழ் / இந்துக் கல்லூரி
8. யூடா சுகந்தி அமலதாசன்
   969/4வளன்புரம், கொழும்புத்துறை.




இடமிருந்து வலம்

1. ஈசாக்கின் தந்தை.
3. எம் பகைவர்களுக்கு நாம் இது செய்யவேண்டும்.
5. எல்லாவற்றிலும் பெரிய ஆமை.

மேலிருந்து கீழ்

1. இறைவனால் உண்டாக்கப்பட்ட முதல் மனிதன்.
2. ஆதிப் பெற்றோரின் மூத்த புதல்வன்.
3. யோசேப்பை அவரின் சகோதரர் வியாபாரிகளுக்கு............ ஆக விற்றார்கள்.
4. யேசு செய்தஅருங்குறிகளை இப்படி அழைப்பர்.



# இந்த இடத்தில் சிரிக்கவும்

ஆண்டவர் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு நடைபெற்ற பரிசுத்த பூமிக்கு ஆயர் ஒருவர் போனார்.

இயேசு கலிலேயாக் கடலை நடந்து கடந்த சம்பவம் (யோவான் 6 ; 16 - 21) அவருக்கு ஞாபகம் வந்தது. கலிலேயாக் கடற்கரையை அடைந்து, இயேசு நடந்த அக்கடலை சற்று பார்த்துக் கொண்டிருந்தார். இயேசு நடந்த கடலின் மீது படகில் ஒரு சுற்றுச் சுற்றி வர அவருக்கு ஆசை வந்தது. படகோட்டியை அழைத்து தம் விருப்பத்தைக் கேட்ட போது "50 டொலர்" என்று அடித்துச் சொன்னான்.

"என்னப்பா அநியாயமாய் இருக்கிறதே. இவ்வளவு அதிகம் கேட்கிறாயே. சற்றுக் குறைக்கக் கூடாதா?" என்று கேட்டபோது "முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். ஆயர் நின்று யோசித்து விட்டு நிதானமாக சொன்னார்.




"கலிலேயாக் கடலை ஏன் இயேசு நடந்து கடந்தார் என்று எனக்கு இப்ப விளங்குகிறது"

— பிள்ளை —

# சமய மூட நம்பிக்கையில் 39 பேர் தற்கொலை


சொர்க்கத்தின் வாயிலை நோக்கிய பயணம் என்ற பெயரில் 39 பேர் செய்துகொண்ட மூட நம்பிக்கையின் தற்கொலை அமெரிக்காவை அதிர்ச்சியில் உள்ளாக்கியுள்ளது.

அமைச்சர் ஒருவரின் புதல்வரும், இத்தற்கொலைக்கு பொறுப்பான, சொர்க்க வாயில் அமைப்பின் குருவான வைற் அப்பிள் என்பவரும் இறந்த 39 பேரில் ஒருவராவார். இவர் புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மார்ச் மாத நடுப்பகுதியில் கேல் பொப்வால் நட்சத்திரம் பிரகாசிக்க ஆரம்பித்ததும் இவர்கள் "புனித வாரத்தை", அனுசரித்த வண்ணம் "புவியியல் கொள்கலன்கள்" எனக் கருதும் தம் உடல்களை நித்திரைக் குளிசைகளை எடுத்து அழித்துக்கொண்டனர்.

# யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே?

மறையாசிரியர் இ. ம. ஜெயசீலன்




இப்போது எங்கு பார்த்தாலும் கோவில் சுவர்களில் ஏன் வீடுகளில் எல்லாம் "வருகிறது 2000ஆம் யூபிலி ஆண்டு' என்ற சுவர் ஒட்டிகள் நிறைஞ்சு போயிருக்கு. அது சரியண்ணே திருச்சபை ஏன் யூபிலி கொண்டாட வேண்டும்?

இம்மண்ணில் இறை மகன் பிறந்த இரண்டாயிரம் ஆண்டு நிறைவேறப்போகிறது, எனவேதான் 2000ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாக திருச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது. சாதாரணமாக குருத்துவ, துறவற அல்லது திருமண வெள்ளி விழா பற்றி அறிந்திருப்பீர்கள். ஏன் விழா? தமது அழைப்பின் இலட்சியப்பணி வாழ்வில் தாம் செய்து முடித்த செயல்களை பெருமையோடு நினைவு கூர்ந்து மகிழ்ச்சியோடு கொண்டாடப் தமது கடந்த வாழ்வில் இலட்சியப்பணியில், தாம் செய்து முடித்தது என்ன? தவறியது என்ன?என்று மீளாய்வு செய்யவும், எதிர்வரும் காலங்களில் எப்படி முன்னேறி, தாம் சிறப்பாக வாழ பணி செய்யலாம் என்று தீர்மானிக்கவும் தான் இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. எனவே யூபிலி என்பது பணிவாழ்வில் நின்று நினைவு கூர்ந்து மீளாய்வு செய்து புதுப்பித்து மகிழ்கின்ற ஒரு நிகழ்ச்சி.

அதேபோல திருச்சபையானதும் தனது பணிவாழ்வின் பயணத்தில் 2000 ஆண்டுகள் செய்த சாதித்திட்ட பணிகளை நினைவு கூரவும், இறைமகன்யேசு கூறிய இறையரசின் மதிப்பீடுகளின்படி திருச்சபை வளர்ச்சி கண்டுள்ளதா? என்று திரும்பிப்பார்க்கவும், தன்னை நற்செய்தி ஒளியிலே புதிப்பித்துக்கொள்ளவும் யூபிலி கொண்டாடுகின்றது. சொல்லப்போனால் திருச்சபை 21 ஆம் நூற்றாண்டில் தன்னைப் புதுப்பித்து மறுமலர்ச்சி பெற்று பயணம் செய்ய அருள் வேண்டும் காலம் இந்த யூபிலி ஆண்டின் நோக்கமாகும்.

அண்ணை யூபிலி ஏன் என்று கேட்பீர்கள்' அதனாலை நீங்கள் தனிப்பட்ட ரீதியில் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வு நற்செய்தி மதிப்பீடுகளின்படியுள்ளதா என்று திரும்பிப்பாருங்கோ. முதலிலே அதைச் செய்யுங்கோ, அடுத்தமுறை உங்களைச் சந்திக்கிறேன்.

# குருசுமுத்தண்ணையின் கிசு கிசு 98

"முதல்நன்மை வருகுது பிள்ளைக்கு ஒரு சங்கிலி காப்பு செய்து போடுவம் எண்டா அண்ணே..."



"ஏன் தம்பி? இது எல்லாம் ஞானக் காரியம் எல்லோ? அருட்சாதனத்தின்ர மகிமையை ஊட்டாம இதில போய் பொருட்சாதனத்தின்ர ஆசையை எல்லோ சின்ன மனசிலை விதைக்கிறியள்."

"என்ன அண்ணே இப்ப நடக்கிற சடங்கெல்லாம் பொருட்சாதனத்தை எதிர்பார்த்துத்தானே நடக்குது. பின்ன,"

"தம்பி எதை விதைக்கிறாயோ, அதைத்தான் அறுப்பாய்! கொண்டு வந்தால்தான் தந்தை, கொண்டுவராட்டா மந்தை எண்டு பின்னுக்கு சொல்ல வைச்சிடாத கவனம். நல்லததை விதைச்சு நல்லதைப் பெற்றுக்கொள். ஓ......"

# விழுதுகள்

விழுதுகளுக்கு, வணக்கம்.

வன்னிப் பெரும் போர் தொடங்கி விட்டது.
மரங்களின் கீழும் தெருவோரங்களிலும்
நமது உடன் பிறப்புக்கள்...
எத்தனை உயிர்கள்
சொத்துக்கள்
இயற்கைச் செல்வங்கள்...
எல்லாம் நாசம்.
அது அங்கே
இங்கே
பிளவுண்டு போனதா எமது தேசம்?
வேலிகள் எப்போதும் எதையும் பிரிக்க முடியாது.
ஆனால் உணர்வுகள் பிரிந்தால்...
சுற்றுலாக்களும்
உல்லாச களியாட்டங்களும்
சினிமா கொண்டாட்டங்களும்
எமது ஒத்த உணர்வுகளைப் பேணிக் கொள்வோமாக.
உங்கள் சிந்தனை புதிய கனவுகளைக்கருத்தரிக்கட்டும்.
புத்துலகு பிரசவமாகட்டும்.
அன்புடன்
சிநேகன்

## போலிகள்

சென்ற இடப்பெயர்வின்போது பலர் கொட்டில் போட்டார்களே? "அவர்கள் இடப்பற்றாக்குறையை விட, கொட்டிலின் அமைப்பை விட அக்கொட்டிலுக்கு எப்பக்கத்தில் "குசினி" இருக்க வேண்டுமென்பதில்தான் அதிகம் அக்கறை காட்டினார்கள். இவர்கள்தான் இயேசுவைச் சுமந்து திரிபவர்கள் தாமென தம்பட்டமடிக்கிறார்கள்! நீங்களாவது சொல்லிக்கொடுக்கக் கூடாதா?

ஒரு வீட்டில் நடந்த விதம் இது. "என்ன எல்லோரும் நடிக்கிறியளே! சும்மா உள்ள செபமெல்லாஞ் சொல்லி ஆண்டவரே ஆண்டவரே எண்டு கத்துறது, பேந்து பேயோட நிண்டு கூத்தாடுறது! திருமறைக்கலாமன்றத்தில நடிக்க இப்ப ஆக்கள் இல்லையாம் நீங்களும் போங்களன், நடிக்கினமாம் நடிப்பு."

ஒரு இளைஞனின் குரல் சற்று காரசாரமாக ஒலித்தது.

அவர்கள் ஒரு கடைகட்டியிருந்தார்கள். சகல ஏற்பாடுகளும் புதன்கிழமை பூர்த்தியாகி இருந்தது. வியாழக்கிழமை கடையைத் திறக்கச் சொல்கிறார் இளைஞன்.

"கள்ளவியாழன் கழுத்தறுக்கும்" என்கிறார் பாட்டி! இது முதல் சிக்கல்."

கடையில் கட்டியிருக்கும் வெருளிப்படத்தை களற்றச் சொல்கிறார் இளைஞனின் அக்கா

தேவையில்லாத வேலைபார்த்தால் "முகம் திரும்பும்" என்கிறார் தகப்பனார் இது மற்றைய சிக்கல்.

இதைவிடப் பெரிய சிக்கல் வீட்டிலுள்ள பெரியவர்கள் 'தவக்காலம்' என்பதால் காலையில் சாப்பிடுவதில்லை!

இதனால்தான் 'நடிப்புக்கதை' யெல்லாம் வந்ததென்று பின்பு புரிந்து கொண்டேன்.

என்ன? உங்களது வீடுகளிலும் இப்படி ஏகப்பட்ட 'நடிகர்கள்' இருப்பார்களே! இவர்கள் தானாய் மாறுவார்கள் என்பது பழைய பொய். இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்து மாற்றவேண்டும் என்பதே மெய்!

ஒருவனுக்குப் பலர் சேர்ந்து அடித்தார்கள் குறுக்கிட்ட ஒருவர் அடித்துக்கொண்டிருந்த ஒருவரிடம் "எதற்காய் அடிக்கிறாய்" எனவினவினார் அவர் சொன்னபதில்.

"எல்லாரும் அடிக்கிறார்கள் நானும் அடிக்கிறேன்."

இதை நள்ளாபார்க்கச் சொல்லும் பாட்டிமாரிடமும் சொல்லி வையுங்கள்! இனிமேல் நீங்கள் பாட்டிகள் செய்துவரும்தவறை செய்யமாட்டீர்கள் தானே?

M. F. நிரோஷன்

## ஒரு தூது

மலரே
செம்பூவே
நமது சமுதாயத் தூண்களுக்கு
ஒரு தூதகம் சொல்
நம் மண்ணில்
நிச்சயமான
நாளைய இலட்சியத்தை நோக்கி
நமது நிதான பயணங்கள்
நிகழட்டும் என்று.

"ஞானா"

யாழ். மறைமாவட்ட

## இளைஞர் ஆணைக்குழுவின் புதிய இயக்குனர்

யாழ்ப்பாண மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின்புதிய இயக்குனராக S.J. இராஜநாயகம் அடிகள் ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

P. J. ஜெபரட்ணம் அடிகளாரைத் தொடர்ந்து S. J. இராஜநாயகம் அடிகள் பொறுப்பேற்கிறார்.

**ஆகஸ்ற், 15, 97**

**12 ஆவது உலக இளைஞர்தினம்**

## பச்சாத்தாபமும் நற்கருணையும்

விசுவாசத்தின் மையப்பொருள் நற்கருணை என்று திருச்சபை எமக்கு படிப்பிக்கிறது. பச்சாத்தாபத்தின் வழியாகத்தான் நற்கருணையைப் பெறலாம். பச்சாத்தாபம் என்னும் தேவ திரவிய அனுமானத்தைப் பற்றி திருச்சபையின் பிரதிநிதிகளாய் இருக்கும் ஆயர், குருக்கள் எத்தனையோ அறிவுரை தந்த போதிலும் மனம் மாறாது இருந்த அன்பின் அரசர் வாழ்வளிக்கும் வார்த்தை உயிர் வாழும் விண்ணக விருந்தாகிய நற்கருணையை அடிக்கடி பெற்றுவரும்போது எம்மை நாம் தட்டிப் பார்ப்போம். அதன் உட்பொருள் விசுவாசத்தின் அடையாளமும் நம்பிக்கையின் சின்னமுமாய் இருக்கிறது. ஆலயங்களின் பலிப்பீட நடுவில் நற்கருணைப்பேழையில் சமாதானத்தின் அரசராக வீற்றிருக்கிறார். அவரை நாம் ஆராதித்து எந்தவகையில் உட்கொள்ளுகிறோம்?

இடம்பெயர்ந்தோம். திரும்பிவந்தோம். அயலவனுடைய பொருளை தன்னுடையது என ஏமாற்றுகிறோம். அடுத்தவனுடைய பொருளை சூறையாடுகிறோம். இதே நேரத்தில் நற்கருணையைப் பெறுகிறோம். ஆலயப்பணி செய்கிறோம். மற்றவர் புரிந்து கொள்ள எம்மை மற்றவர்கட்கு நல்லவனாக நடத்துகிறோம். கிறிஸ்துவை நாம் அன்பு செய்வோமானால் அவரின் சகோதரராக மாறவேணும். எம் சகோதரர் இன்னும் சொந்த நிலங்களை விட்டு கண்ணீரும் கவலையுமாய் அலையும் பரிதாபநிலையைக் கண்டு ஒரு கணம் சிந்திக்கிறோமா?

பாவசங்கீர்த்தன தொட்டியில் யேசுகிறிஸ்துவின் சாயலாகத்தான் குரு எம்மை பச்சாத்தாபத்துக்கு அழைத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே பச்சாத்தாபமென்னும் தேவதிரவிய அனுமானத்தை அடிக்கடி பெற்று அருட்சாதனங்கள் வழியாக முடிவில்லா வாழ்வை விண்ணகத்தில் பெற திருச்சபை எம்மை அழைக்கிறது. அதை கண்டுணர்வோமாக.

அருளப்பு கொர்னேலியஸ்
கொழும்புத்துறை.

## வெரித்தாஸ் வானொலி...

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

பல திசைகளிலிருந்தும் எதிர்ப்புக்களும் இடர்களும் வந்த போதும்கூட தடுமாறாமல் ஈழத் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திலே உற்ற தோழனாய் தடுமாறாது நடக்கிறது தமிழ்ப்பணி" என்று மேலும் தெரிவிக்கிறார்.

"வெரித்தாஸ்" (Veritas) என்ற லத்தீன் மொழிச் சொல்லின் பொருள் "உண்மை" என்பதாகும். வெரித்தாசின் நிர்வாகத் தலைமையகம் பிலிப்பைன்ஸ் நாட்டு தலைநகர் மணிலாவின் கெயிசான் (Quezon City) நகரிலும் ஒலிபரப்பு மையம் மணிலாவில் இருந்து 400 மைல் தொலைவில் பலாவிக் என்ற இடத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பிலும் உள்ளது. அன்பு, நீதி, சமத்துவம் அமைதி ஆகிய மதிப்பீடுகளை மனிதரிடையே வளர்க்கவும், ஆசியப்பகுதிகளின் மொழி, கலாச் சாரப்பாரம்பரியங்களை பாதுகாக்கவும் உண்மையின் குரலாய் ஒங்கி ஒலிக்கவும் என 1969 ஏப்பிரல் 11ஆம் நாள் கத்தோலிக்க கிறிஸ்தவ ஆயர் பேரவைக் கூட்டமைப்பால் "வெரித்தாஸ் ஆசியா" சிற்றலை வானொலிநிலையம் நிறுவப்பட்டது. 1976 நவம்பர் முதலாம்நாள் இந்நிலையத்திலிருந்து தமிழ் ஒலி பரப்பு தொடங்கப்பட்டது. 1997ஆம் ஆண்டில் இவர்களின் திட்டங்கள்:

(1) ஈழத்தின் பெரும்பான்மை மக்கள் தமிழ் பணி குடும்பத்தின் உறுப்பினராய் இருப்பது போல் தமிழகத்திலும் இனிய இதயங்கள் வட்டத்தை விரிவுபடுத்தல்.
(2) அரபு - வளைகுடா நாடுகளில் பணி புரியும் தமிழ் இதயங்களுக்கு அதிக சேவை செய்தல்.
(3) ஒலி பரப்பப்பட்ட தரமிகு ஆயிரக்கணக்கான படைப்புக்களில் சிலவற்றையேனும் புத்தக வடிவில் கொணரல்.

### அருள் தரும் ஆண்டு

வார்த்தை மனுவுருவானார்
2000 ஆண்டு நிறைவினை நோக்கி
புனிதம் நிறைந்த யாத்திரை செய்யும்
சகோதரர்களே சற்றுக் கேளும்.

மாற்கு நற்செய்தியதனை
முற்று முழுதாய் வாசித்தறிந்து
மனுவுருவான யேசுக்கிறிஸ்துவை
வாழ்வினில் கொண்டு வாழ முயல்வோம்.

குழும வாழ்வில் குடும்பமாகி
வார்த்தையைப் பகிர்ந்து சான்று பகர்ந்து
அன்பினைக் கொடுத்து அன்பினில் வாழ்வோம்
மன்னித்து மறந்து மாண்பினில் உயர்வோம்.

இ. அலெக்ஸ் அமலரட்ணம்
யாழ், பேராலயம்.

"எங்கள் ஞானத் தந்தையர்க்கே இறைவனே ஆகி அருள்வீர்"
பாப்பரசர்தினம் ஆனி29

### "கிறிஸ்து நாதரே என்றும் மனிதனின் மீட்பர்"

அழகிய வர்ண பூபிலி ஆண்டு (Sticker) ஒட்டிகள் ஆயர் இல்லத்தில் விற்பனைக்குண்டு. பங்குத்தந்தையர்களே, நிறுவனக்குருக்களே, விரையுங்கள். ஒன்று 2.50 சதம் மட்டுமே.

### 3ஆம் வருட நினைவு



அமரர் திருமதி
சிசிலியா அந்தோனிப்பிள்ளை
மலர்வு 09.04.1915 உதிர்வு 24.05.1994

"என்றென்றும் அவர் அதி மிக்கவராய் செய்தீர் உன் திருமுன் மகிழ்ச்சி மிக்கவராய் விளங்கச் செய்யும்"

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளை
128 கொழும்புத்துறை வீதி
பண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
A/26/97

### விண்ணக வாழ்வில் 11ஆம் ஆண்டு நினைவு



திருமதி யோசப் மேரி யசிந்தா
மண்ணில் 1950-08-19 விண்ணில் 1986-05-18

கண்மணியாய் காத்து
கருத்துடனே வளர்த்தெடுத்த
கண்கண்ட தெய்வமே
கருணைத் திருஉருவே
விண் சென்று 11 ஆண்டுகள்
விரைந்து கழிந்ததம்மா
கண்காணும் பொருட்களிலும்
கருத்திலும் நீ
நிறைந்துள்ளாய்.
எண்ணம் போல் வாழ்விப்பாய்
இறைவன் அருள் சேர்ப்பாய்.

நினைவு கூரும்
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனிமார்.
26/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

## வாசகர் கருத்து





புதிய ஆசிரியருக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். 25 பேப்பர் அனுப்பிவிடவும். நேரத்துக்கு பத்திரிகை வந்து சேருமா என்பது தான் சந்தேகம்......

வியாகுல மாதா ஆலயம். ஆனந்தன் பெர்னாந்துப்பிள்ளை
கொழும்பு 13 (பங்குத்தந்தை)

> நேரத்திற்கு அனுப்பிவைக்க முழு முயற்சியும் எடுப்போம். மீண்டும் எம் பத்திரிகை கொழும்பில் விற்பனையாக தாங்கள் எடுக்கும் ஆர்வத்திற்கு நன்றி. [ஆ-ர்]

ஒரு பத்திரிகைக்கும் இன்னொரு பத்திரிகைக்கும் இடையே 1½ மாத இடைவெளி உள்ளது.

அருட் தந்தை ஜெயநேசன் அடிகளாரின் மறைவுச் செய்தி பாதுகாவலன் மூலம் அவருடைய 31 வது நினைவு நாளுக்குப் பிறகே கிடைத்தது.

பத்திரிகை வெளியிடுவதில் நீங்கள் பல பிரச்சனைகளை எதிர் நோக்கலாம். இருந்தாலும், கஸ்ரங்களை எதிர்நோக்கினாலும் பாதுகாவலனை மீண்டும் அதன் பழைய நிலைக்கு, ஏன் அதிலும் மேலான ஓர் உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

S. வின்சென்ற் மரியசெல்வம்
முனை, பருத்தித்துறை,

> பலரும் "மாதம் ஒன்று வேண்டாம் இரண்டாக ஆவது ஆக்குங்கள்" என்று கருத்துதெரிவித்தார்கள். இடைவெளி நிச்சயமாக குறையும். உன்னத நிலைக்கு பாதுகாவலன் வரும் கொஞ்சம் பொறுங்களேன்! [ஆ-ர்]

புதிய ஆசிரியரின் நிர்வாகத்தில் புதிதாக மலர்ந்த 30-4-97ன் பாதுகாவலன் புதுப்பொலிவுடன் மிளிர்ந்தது. மிக மிகச் சந்தோஷம் அடைந்தோம். வளர்க தங்கள் பணி என வாழ்த்துகிறோம். மறைந்த குருவானவர் எப்படி மரணித்தார் என்பதைத் தெளிவாக நாம் அறிய விரிவாகச் செய்தி அளித்த தங்கள் ஆக்கத்திற்கு எம் நன்றி.

திருமதி செல்வம் வேதநாயகம்

> தொடர்ந்து படியுங்கள். எங்களுக்கும் ஒரு வரி எழுதுங்கள். அவை எம்மை நீண்ட தூரம் அழைத்துச்செல்லும். [ஆ-ர்]

1. M. F. நிரோஜன் yr. 12 $B_2$ s.p.c
2. செல்வி மேரி மஞ்சரிக்கா ஆனந்தராசா, கரவெட்டி.

> மேறகுறிப்பிட்டவர்களின் கடிதங்கள் கிடைத்தன. நன்றி. குறிப்புக்கள தரத் தயங்க வேண்டாம். (ஆ-ர்)

### விண்ணக வாழ்வின் 6 ஆம் ஆண்டு நினைவு



திருமதி வஸ்தியாம்பிள்ளை
விக்ரோறியா மனோன்மணி
மண்ணில் 1930-07-18 விண்ணில் 1997-05.19

நாங்கள் உங்களை அன்பு செய்தோம். இறைவனோ உங்களை அதிக அன்பு செய்தார். சீவியத்தில் நேசித்தோம். மரணத்தில் மறவோம்.

அன்புடன் நினைவு கூரும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
26/1 கோவில் வீதி
யாழ்ப்பாணம்.
A / 27 / 97

## அன்பின் கங்கை அன்னை தெரேசா

சொல்லின் செல்வன் இளவாலை அமுது என அழைக்கப்படும் வித்துவான் S. அடைக்கலமுத்து எழுதிய "அன்பின் கங்கை அன்னை திரேசா" என்னும் நூல் லண்டன் அக்கிரம் நகர மண்டபத்தில் மே, 10,97இல் வெளியிடப்பட்டது.

திரு. அமுதன் பேதுருப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் ஈழநாடு ஆசிரியர் எஸ். எஸ். குகநாதனும், எஸ். ஜே இம்மானுவல் அடிகளும் கலந்து கொண்டனர்.

## இந்துகள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் பௌத்தர்கள் எல்லோரும் வரும் சுவிஸ் மாதா கோவில்

சுவிற்சலாந்து அயன்சில்டன் என்ற இடத்தில் உள்ள 800 ஆண்டுகாலப் பழமை வாய்ந்த (BLACK MARDONA) மாதா கோவிலே மேற்படி சகல மதத்தவரையும் கவரும் ஆலயமாகத் திகழ்கிறது. பல தமிழ் யாத்திரிகர்களும் இங்கு வந்து போகிறார்கள்.

நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள் யோவான் (14:7)

எம்கருத்து

# இது உங்கள் பாதுகாவலன் II

கடந்த தடவை நாம் எழுதிய எம்கருத்தைக் கால இடைவெளி அதிகம் என்றாலும் மறந்திருக்கமாட்டீர்கள் என்றே நம்புகிறோம்.

அதன் இரண்டாம் பகுதியையும் எழுதி முடிக்க விரும்புகிறோம்.

ஒரு பத்திரிகையின் அறாத்தொடர்ச்சிக்கும், நிலையான தரத்திற்கும், வளர்ச்சியின் நகர்விற்கும் ஓர் உறுதியான பின்புலம் அவசியம்.

பாதுகாவலனின் அறாத்தொடர்ச்சிக்கு ஓர் உறுதியான பின்புலம் உண்டு. போரினாற் சில தடவைகள் பாதுகாவலன் நிறுத்தப்பட்டமை தற்காலிகமானதும், தவிர்க்கப்பட முடியாததுமாகும்.

யாழ்நகரிலேயே பழம் பெருமையுடனும் உறுதி மிக்க தரத்துடனும் விளங்கும் கத்தோலிக்க அச்சகம் பாதுகாவலனின் பலமான பின்புலமாகும்.

இறைவழி நடத்துதலுடனும் தூர நோக்குடனும் இதனை நிறுவச் செயற்பட்ட அனைவரையும் நாம் நன்றியுடன் நினைவு கூரவேண்டும்.

பாதுகாவலனின் நிலையான தரத்திற்கும் வளர்ச்சியின் நகர்விற்கும் நிர்வாகப்பகுதியோடு தொடர்புடைய ஒரு பக்கத்தை கடந்த தடவை அறிவித்தோம்.

பலர் குறிப்பாக குருக்கள் சிலர் செயல்முறைக்கு ஒரு பின்னணி தேவை என்று தெரிவித்தார்கள்,

''நிச்சயம் பாதுகாவலனுக்காக உழைப்போம்'' என்று உறுதி சொன்னார்கள் பங்கு மட்டத்திற் பாதுகாவலனின் விற்பனைக்கும் விளம்பரத்திற்கும் பல திட்டங்களை அறிவித்தார்கள்.

மகிழ்ச்சியாக இருக்கிறது. நன்றி.

'அவ்வளவோடு நின்றுவிடாதீர்கள்' என்பதே எமது அன்பு வேண்டுகோளாகும்.

பாதுகாவலன் தொடர்பாளர்களை முதற்பகுதியோடு தொடர்ந்து அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். பணியாற்ற முன் வந்தமைக்கு நன்றி கூறுகிறோம்.

—யாழ் மறைக்கோட்டம்- அருள்திரு. A. C. கிறிஸ்தோப்பர்
—மானிப்பாய் மறைக்கோட்டம் - அருள் திரு றோக்
—தீவுப்பகுதி - அருள் திரு அன்ரனிபாலா
—பருத்தித்துறை மறைக்கோட்டம் - அருள்திரு அன்ரனிப்பிள்ளை
—கிளிநொச்சி மறைக்கோட்டம் - அருள்திரு சந்திர போஸ், மறை ஆசிரியர் ஆரோக்கியநாதர். இவர்கள் இருவரிடமிருந்தும் பொறுப்பேற்றபின் அறிவித்தல்கள் வரவில்லை அன்பு வேண்டுகோளைப் பொது நலனுக்காக ஏற்பார்கள் என்றே நம்புகிறோம்.

எம் திட்டங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அறிவிப்போம்.

யாழ் மறைக்கோட்ட பங்குகளில் பாதுகாவலன் விற்பனையும் விளம்பரத்தையும் யாழ் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர் பொறுப்பெடுத்து, பங்குகளில் இயங்கும் இளைஞர் மன்றங்கள் அல்லது பூசைப் பரிசாரகர் ஊடாக நடைமுறைப்படுத்துவர்,

எமது வளர்ச்சி, தரத்தோடு செயற்படும், வேறு இரு குழுக்கள் இயங்கும்.

ஒன்று பகுதி ஆசிரியர்கள் (Column Editors) மற்றையது ஆசிரிய ஆலோசகர்கள்.

ஏற்கனவே உள்ள பகுதி ஆசிரியர்களோடு குடும்பம் ஒரு கதம்பம் பகுதியை திரு. சு. சவுந்தரம் மறையாசிரியர் குடும்ப ஆணைக் குழுவின் சார்பாகச் செய்வார். யூபிலி ஆண்டுப் பகுதியை திரு இ. ம. ஜெயசீலன் மறையாசிரியர் திருவழிபாட்டு ஆணைக் குழுவின்சார்பாக நடத்துவார்.

பகுதி ஆசிரியர்கள் 3 மாதத்திற் கொருமுறை கூடித் திட்டமிடுவார்கள்.

9. 6. 95 பாதுகாவலனில் வெளியிடப்பட்டு செயற்பட்டுவரும் ஆசிரிய ஆலோசனைக்குழு தொடர்ந்தும் மாதத்தில் ஒரு தடவை ஒன்று கூடிச் செயலாற்றும்.

125 ஆம் ஆண்டை நோக்கிய பொற்காலத்தில் பிரவேசிக்க தங்கள் உறுதியான முழுமையான பங்களிப்பை எமது எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ப இவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உண்டு.

வாழ்த்துக்களும் ஆசீர்களும், ஆலோசனைகளும் அறிவுரைகளும் நேரிலும் கடிதத்திலும் வழங்கியவர்களுக்கு எமது அன்பு நன்றிகள்.

இவை எமது பணியில் எம்மை நீண்ட தூரம் அழைத்துச் செல்லும் என்று சொல்லி வைக்க விரும்புகிறோம். பாதுகாவலனைப் படிப்பவர்களே உங்கள் எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் பற்றி எமக்கும் ஒரு வரி எழுதுங்கள்.

125 ஆம் ஆண்டை நோக்கிய பொற்காலத்தில் விரைவில் பிரவேசிப்போம்.

# அமதிகள்சபைக்கு புதிய குருக்கள்



அருட் சகோதரர் செ. அந்தோனிமுத்து குரூஸ் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சார்ந்த திரு. திருமதி. செல்வம் குரூஸ் புஸ்பவதி தம்பதிகளின் புதல்வராவர். இவர் தாழ்வுபாடு புனித வளனார் வித்தியாலயத்திலும், முருங்கன் மகா வித்தியாலயத்திலும் ஆரம்பக் கல்வியைக் கற்று புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்றார்.

புனித வளனார் குருமடத்தில் ஆரம்பக் குருத்துவ பயிற்சியை பெற்று, கொழும்புத்துறை புனிதசவேரியார்குருத்துவக் கல்லூரியில் மெய்யியலையும், கண்டி தேசிய குருமடத்தில் இறையியலையும் கற்றார்.

மே 7, 1997 மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட வைகாசி 8, 1997இல் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.

★ ★

அருட் செல்வர்கள், சு. அல்றின் அ. ம. தி. ஆ. ஜெறோம் அ. ம. தி. ஆகிய இருவரும் வைகாசி 31, 1997 இல் திருமலை/ மட்டுநகர் ஆயரால் பாலையூற்று லூர்த்து அன்னை ஆலயத்தில் குருக்களாகத் திருநிலைப் படுத்தப்படுவர்.

## குருக்கள் மடத்தில் இளைஞர் மன்றம்

திருகோணமலை மட்டுநகர் மறைமாவட்டத்தில் தேத்தாத்தீவுப் பங்கில் குருக்கள்மட கிராமத்தில் புனித பிரான்சிஸ் அசிசியார் தேவாலயத்தில் அருட் தந்தை றோமன் அரசரட்ணம் அடிகளாரின் ஆசீருடன், அருட் சகோதரர் தொபியாஸ் அவர்களின் முயற்சியினால் அவரையே ஆலோசகராகவும் ''கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்வோம்' என்ற விருது வாக்கைக் கொண்டு, பங்குனி 6, 1997 கத்தோலிக்க இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமம் 99% வீதம் இந்து மக்களைக் கொண்டது.

இந்து குருக்கள் வசித்து வந்தபடியால் ''குருக்கள் மடம்'' என்று பெயர் பெற்ற இக் கிராமத்திலே தற்போது 25 பேர் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதன் கத்தோலிக்க நிர்வாகக்குழுவில் உறுப்பினர்கள் பின்வருமாறு; தலைவர். பே. பிரான்சிஸ், உபதலைவர்: ம. ஜெயமோகன் செயலாளர்: ஆ. பீலிக்ஸ் உபசெயலாளர்: அ. அகுஸ்தின் பொருளாலர்: ம. சுகிர்தராணி

சகோ. மில்றோய், அசிசி இல்லம்
குருக்கள் மடம்

பருத்தித்துறை மறைக் கோட்ட

# அன்பியற் கருத்தரங்கின் மனப்பதிவுகள்

★ அறிவு பூர்வமானதாக இராமல் அனுபவபூர்வமானதாக இருந்தது. சலிப்பு ஏற்படவில்லை. மகிழ்ச்சியாக இருந்தது. —அருட்செல்வி தார்சிலா H. F.

★ ''தலமைத்துவம்'' சரியாகப் புரிந்து கொண்டோம். பல தேடல்களுக்குப் பதில் கிடைத்தது. –திரு. கருணாகரன்

★ ''புதிய இளம் ஊக்குவிப்பாளர்களாக எம்முடன் கலந்து கொண்ட செல்வன் றங்கநாயகம், செல்வன் சக்தி, திருமதி யூஜின், செல்வி சாலினி இம்மானுவேல் ஆகியோர் துடிதுடிப்புடனும், எம்மை சோர்வுறச் செய்யாமலும் செயற்பட்டனர். செல்வி. A. –மஞ்சுரிக்கா.

★ '' அருட்திரு இருதயதாஸ் அடிகளாரின் விளக்கங்கள் தாராளமானதாக இருந்தது. குருக்கள், பொதுநிலையினர் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படவில்லை ''.
— திரு. இயேசுநாயகம்

★ '' அருட்திரு இயேசுரட்ணம் அடிகளாரின் துடிதுடிப்பும் சிரிப்பும் எமக்கு மேலும் உற்சாக மூட்டின ''
— திருமதி. ஆனந்தி

★ '' அருட்திரு ரவிச்சந்திரன் அடிகளார் தான் பெற்றுக் கொண்டதை முழுவதுமாக எமக்குத் தந்தார்.''
— அருட்சகோதரி யோசவ் H.C.
பேட்டி A. M. மஞ்சுரிக்கா
கரவெட்டி.

## கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தில் ஜெபநேசன் அடிகளின் 31 ஆம் நாள் நினைவு

துன்பப்படும் போது இறைவன் எமக்குத் தூதுவராக ஒருவரை அனுப்புகிறார், அதில் ஒருவராகத்தான் அமரர் ஜெபநேசன் அடிகளாரை நான் காண்கிறேன்.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர்
திருமதி சறோஜா சிவச்சந்திரன்

அமரர் ஜெபநேசன் அடிகள் ஒரு சமாதானப்புறாவாக வெண்புறாவாக செயற்பட்டார்.

அவரது அன்பு மானிடத்தை நேசிப்பதில் அக்கறை கொண்டிருந்தது, தூய பணியை செய்த அவருக்கு அர்த்தமுள்ள பணியால் அஞ்சலிப்பது பொருத்தமானது.

எழுத்தாளர் செம்பியன் செல்வன்.

அமரரின் பாதை தீர்க்கதரிசனப்பாதை. திட்டமிட்டு எதையும் செய்யும் இறைவாக்கினராக நான் அவரைக் காண்கிறேன். தூரநோக்குடன் சர்வமத ஒன்றிப்புக்கு கை கொடுத்து உதவினார். —அருள்திரு நேசக்குமார்

எதையும் சிரித்த முகத்துடன் ஏற்று செயல்படுவதில் அவரது ஆளுமையைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன்.

திருமதி ஜெனோவா அல்பிரட்
றெட்பானா திட்டமிடல் பணிப்பாளர்

# தொண்டர் ஆசிரிய நியமனம்!

கத்தோலிக்க — கிறிஸ்தவ பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களது விபரங்களை உடன் அனுப்பி வைக்கும்படி அதிபர்களை யாழ். கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

மேற்படி பாடங்களுக்கான ஆசிரிய பற்றாக் குறையை நீக்குவதற்கே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ பாடம் உட்பட நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு தொண்டர் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

பாசையூர், புனித அந்தோனியார் திருவிழா — யூன், 4-13, 97

ஊர்காவற்துறை, புனித அந்தோனியார் திருவிழா-யூன், 6-15, 97

கரம்பொன் வேளாங்கண்ணி ஆலய விழா, — மே 28 – 31, 97

"எனது விருப்பங்களை வர்த்தகமாக்குவதை நான் விரும்புவதில்லை"

— அன்னை திரேசா

நாஸ்வில்லி நகர் தேனீர்க்கடை ஒன்றில் அன்னை திரேசாவின் உருவ அமைப்பில் பாண் ஒன்றை உருவாக்கி, அலங்கார விளக்குகள் அமைத்து, அன்னை திரேசா இதனைப் பார்த்தால் மகிழ்ச்சி அடைவார் என்று எதிர்பார்த்திருந்த கடைக்காரருக்கே அன்னை திரேசா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

எனது விருப்பங்களை வர்த்தகமாக்குவதை நான் விரும்புவதில்லை. எனது பெயர், குரல், ''இமேஜ்'' ஆகியவற்றை எந்தவிதமான நிதி சேகரிப்பிற்கும் பயன்படுத்துவதை நான் வெறுக்கிறேன்.

**வழியும், உண்மையும் வாழ்வும் நானே, என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (அரு 14:6)** (உலக சமூக தொடர்பு தினம் மே11. 1997)

புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1997ஆம் ஆண்டு வைகாசி 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல P 193